செ.வெ.எண்-17 நாள்-10.04.2018

# அரியலூரில் மாவட்ட அளவிலான ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் குறித்து செயலி பயிற்சி நடைபெற்றது.

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின் சார்பில் தேசிய ஊட்டச்சத்து குழுமம் மூலம் மாவட்ட அளவிலான செயலி பயிற்சியினை மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் இன்று (10.04.2018) தொடங்கி வைத்தார்கள்.

**இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்தாவது :-**

தேசிய ஊட்டசத்து குழுமம் மார்ச் 8-ல் பாரத பிரதமர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. இக்குழுமம் செயல்படும் அனைத்து மாநிலயங்களில் உள்ள அங்கன்வாடி மையங்களிலும் செயலி வடிவில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதன் தொடர்ச்சியாக, இன்று 10.04.2018 முதல் 13.04.2018 வரை திட்டங்கள் மற்றும் செயலி பயிற்சி வகுப்புகள் நடைபெறுகிறது. இப்பயிற்சி மாஸ்டர் பயிற்சியாளர்கள் 4 நபர்கள் மூலம் குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர்கள், மேற்பார்வையாளர் நிலை-1, மேற்பார்வையாளர் நிலை-2, அங்கன்வாடி பணியாளர் 20 நபர்களுக்கு இப்பயிர்சி வழங்கப்படுகிறது. இப்பயிற்சியின் மூலம் அனைத்து பதிவேடுகளும் செயலி முறையில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

தேசிய ஊட்டசத்து குழுமத்தின் நோக்கம் அரியலூர் மாவட்டத்தில் வரும் 3 ஆண்டிற்குள் குள்ளத்தன்மையாக உள்ள குழந்தைகளின் விகிதம் 37 சதவீதத்திலிருந்து 3 சதவீதமாக குறைத்திடவும், எடைக்குறைவாக உள்ள குழந்தைகளின் விதிதம் 29.7 சதவீதத்திலிருந்ருது 2 சதவீதமாக குறைத்திடவும், குழந்தைகள் மற்றும் தாய்மார்களின் இரத்தசோகை 47.1 சதவீத்திலிருந்து 3 சதவீதமாக குறைத்திடவும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் பிற துறைகளுடன் இணைந்து பணிபுரிந்து, சிறப்பாக பணிபுரியும் பணியாளர்களுக்கு ரூ.500/- சிறப்பு ஊக்கத்தொகை வழங்கப்படவுள்ளது.

அங்கன்வாடி மையங்களில் பதிவேடுகள் எழுதப்படுவதை தவிர்த்து உடனுக்குடன் மென்பொருளில் பதிவு செய்யப்படும். பொதுமக்களிடம் ஊட்டச்சத்து தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்திடவும், ஊட்டசத்து நிலையினை உயர்த்திடவும் பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்படவுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலர் பெ.ஜெயராணி, துணை இயக்குநர் சுகாதாரப்பணிகள் மரு.வீ.சி.ஹேமசந்த்காந்தி மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலர்கள், அங்கன்வாடி பணியாளர்கள் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**